## திருப்பூர் வேலம்பாளையத்தில்

# சிதிலமடைந்த இடுகாட்டை சீரமைக்க கோரிக்கை



▶ திருப்பூர் வேலம்பாளையம் பகுதியில் உள்ள இடுகாடு உரிய பராமரிப்பு இல்லாததால் புதர் மண்டியும் சேதம் அடைந்தும் பயன்படுத்தப்பட முடியாத நிலையில் காணப்படுகிறது.

**திருப்பூர், டிச. 31:** திருப்பூர் மாநகராட்சியின் 12வது வார்டில் அமைந்துள்ள வேலம்பாளையம் அரசு மருத்துவமனை பின்புறத்தில் உள்ள இடுகாடு பராமரிப்பின்றி சிதிலமடைந்து பயன்படுத்த முடியாத வகையில் உள்ளது. இதனை பயன்படுத்தும் வகையில் மாற்றித்தர வேண்டும் என அப்பகுதி மக்கள் வலியுறுத்தி உள்ளனர்.

இது குறித்து அப்பகுதி மக்கள் கூறுகையில், திருப்பூர் மாநகராட்சி 12வது வார்டுக்கு உட்பட்ட 15.வேலம்பாளையம் அரசு மருத்துவமனைக்குப் பின்புறமுள்ள இடுகாடு முறையாக பராமரிக்கப்படாத காரணத்தால் புதர் மண்டியுள்ளது. இரவு நேரங்களில் சிலர் திறந்த வெளி கழிப்பிடமாகவும் பயன்படுத்துகின்றனர். இதனால் கடும் துர்நாற்றம் வீசுவதால் அருகிலுள்ள மருத்துவமனைக்கு வரும் நோயாளிகள் மற்றும் பொதுமக்கள் கடும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். மேலும், கஞ்சா, மது போன்ற போதைப் பொருட்களைப் பயன்படுத்தும் சமூக விரோதிகள் இங்கு சுற்றி திரிகிறார்கள். இது பாதுகாப்பற்ற சூழ்நிலையை உருவாக்கியுள்ளது.

இந்த இடுகாட்டில் இறந்தவர்களின் இறுதிச் சடங்குகளை செய்ய வரும் உறவினர்கள் கடும் அவதிக்கு உள்ளாகிறார்கள். காத்திருப்போர் அறையும், தகனம் செய்யும் இடமும் மிகவும் சிதிலமடைந்து இடிந்து விழும் நிலையில் உள்ளன. மயானத்திற்குள் செல்லும் வழித்தடமும் முறையாக பராமரிக்கப்படவில்லை. எனவே, இந்த இடுகாட்டைச் சுற்றி சுற்றுச்சுவர் அமைக்க வேண்டும்.

மரக்கன்றுகள் நடுதல், புல்வெளியுடன் கூடிய நடைபாதை, மின் விளக்குகள் மற்றும் குடிநீர் குழாய் அமைத்து தூய்மையாகவும், சுகாதாரமாகவும் பராமரிக்க வேண்டும். சமூக விரோதிகள் உள்ளே செல்ல முடியாத வகையில் காண்காணிக்க ஏற்பாடுகள் செய்ய வேண்டும். இதுகுறித்து ஏற்கனவே மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வேலம்பாளையம் கிளைகளின் சார்பில் முதலாம் மண்டல அலுவலகத்தில் மனு அளிக்கப்பட்டுள்ளது. மாநகராட்சி உடனடியாக தலையிட்டு இதை சீரமைக்க வேண்டும். இந்த இடுகாடு ஒரு பொது இடமாக இருப்பதால், மாநகாராட்சி நிர்வாகம் தலையிட வேண்டும். சுகாதாரமற்ற நிலையில் உள்ள இந்த இடம் பல்வேறு நோய்களை பரப்புவதற்கும் வழிவகுக்கும். எனவே, உடனடியாக இதன் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என கோரிக்கை விடுத்துள்ளனர்.

## முதலிபாளையம் பாதிக்கப்பட்ட பகுதிகளை

# மாசுபட்ட பகுதியாக அறிவிக்கக்கோரி ஆர்ப்பாட்டம்




▶ நல்லூர் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குழுவினர், நேற்று திருப்பூர் குமரன் நினைவகம் அருகில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

**திருப்பூர், டிச. 31:** முதலிபாளையத்தில் சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்ட பகுதியை மாசுபட்ட பகுதியாக அறிவிக்ககோரி முதலிபாளையம், நல்லூர் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குழுவினர், நேற்று திருப்பூர் குமரன் நினைவகம் அருகில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

முதலிபாளையம், நல்லூர் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குழுவை சேர்ந்த வேலுசாமி தலைமை வகித்தார். நஞ்சாரயன் பாதுகாப்பு குழு கிருஷ்ணசாமி, தமிழக முன்னேற்ற அணி இமயம் சரவணன், மா.கம்யூ கணேசன், இ.கம்யூ இசாக், தமிழ்நாடு விவசாயிகள் பாதுகாப்பு சங்க நிர்வாகி சதீஷ், முன்னாள் எம்எல்ஏ நடராஜன், பாஜ மாவட்ட தலைவர் ஸ்ரீனிவாசன், முன்னாள் நிர்வாகி பாயிண்ட் மணி, த.மா.கா நிர்வாகி சேதுபதி நாம் தமிழர் கட்சி சிவா, தவெக தினேஷ் உள்ளிட்ட பலர் கோரிக்கைகளை விளக்கி பேசினர். ஆர்ப்பாட்டத்தில் சுற்றுச்சூழல் பாதிக்கப்பட்ட பகுதிகளை மாசுபட்ட பகுதியாக அறிவிக்க வேண்டும், பாதிக்கப்பட்ட அனைத்து பகுதிகளுக்கும் இழப்பீடு வழங்க வேண்டும், பாதிக்கப்பட்ட பகுதிகளில் சீரமைப்பு நடவடிக்கைகளை தவிர கழிவு மேலாண்மை தொடர்பான புதிய முன்னெடுப்புகளை மேற்கொள்ளக்கூடாது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கங்களை எழுப்பினர். இந்த ஆர்ப்பாட்டத்தில் கையில் பாதாகைகள், மற்றும் மாசடைந்த நீர், வாடிய பயிர்களோடு ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

## ஆக்கிரமிப்பில் கட்டப்பட்ட

# காங். கட்சி அலுவலகம் அகற்றுவதற்கு எதிர்ப்பு

### மறியலில் ஈடுபட்ட 12 பேர் கைது



▶ திருப்பூரில் காங்கிரஸ் கட்சி அலுவலகத்திற்கு உரிய பட்டா இருந்தும் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டு கட்டப்பட்டதாக கோரி அலுவலகத்தை பூட்டிய வருவாய்துறை அதிகாரிகளிடம், கட்சியினர் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

**திருப்பூர், டிச. 31:** திருப்பூர் புறம்போக்கில் கட்டப்பட்ட காங்கிரஸ் கட்சி அலுவலகத்தை காலி செய்ய மறுத்து சாலை மறியலில் ஈடுபட்ட 12 பேரை போலீசார் கைது செய்தனர்.

திருப்பூர், 15.வேலம்பாளையம் பகுதியில் நத்தம் புறம்போக்கு இடத்தில் கட்டிடம் கட்டி தனிநபர்கள் சில வாடகைக்கு விட்டுள்ளதாகவும், அதில் காங்கிரஸ் கட்சி அலுவலகமும் இயங்குவதாகவும் தனிநபர் ஒருவர் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதிகள் புறம்போக்கில் உள்ள இடத்தை அரசு கையகப்படுத்துமாறு கடந்த 2024ம் ஆண்டு ஏப்ரல் மாதம் தீர்ப்பு வழங்கியது. அதனை தொடர்ந்து வருவாய்துறையினர் அமல்படுத்தாமல் இருந்தனர்.

நீதிமன்ற உத்தரவை அமல்படுத்தாமல் இருந்ததால் நீதிமன்ற அவமதிப்பு வழக்கும் தொடரப்பட்டது. இந்நிலையில் புறம்போக்கில் உள்ள இடத்தை நீதிமன்ற உத்தரவுப்படி கையகப்படுத்துமாறு மாவட்ட கலெக்டர் மனீஷ் வருவாய்த்துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

வருவாய்த்துறையினர் ஆக்கிரமிப்பை காலி செய்யுமாறு முறையாக நோட்டீஸ் விநியோகம் செய்தனர். அதனால் அங்கு வாடகைக்கு இருந்தவர்கள் கடைகளை காலி செய்தனர். தொடர்ந்து புறம்போக்கில் கட்டப்பட்ட கட்டிடத்தில் ரேஷன் கடைகள், அங்கன்வாடி மையம் ஆகியவை செயல்பட்டு வருகிறது. ஆனால் காங்கிரஸ் கட்சி அலுவலகம் மட்டும் காலி செய்யப்பட்டாமல் இருந்தது.

இந்நிலையில் முறையாக நோட்டீஸ் விநியோகம் செய்தும் காலி செய்யவில்லை எனக்கூறி துணை தாசில்தார் அருள், ஆர்.ஐ.சுரேஷ், கிராம நிர்வாக அலுவலர் ஆறுமுகசாமி, 15.வேலம்பாளையம் இன்ஸ்பெக்டர் பிரேமா உள்ளிட்டோர் ஆக்கிரமிப்பை அகற்றும் பணியில் ஈடுபட்டனர். அப்போது காலி செய்ய மறுத்து காங்கிரஸ் கட்சியினர் சாலை மறியலில் ஈடுபட்டனர். தொடர்ந்து சாலைமறியலில் ஈடுபட்ட 12 பேரை போலீசார் கைது செய்து அருகில் உள்ள திருமண மண்டபத்தில் அடைத்தனர். தொடர்ந்து வருவாய் துறை அதிகாரிகள் காங்கிரஸ் கட்சி அலுவலகத்தை பூட்டி நோட்டீஸ் ஒட்டினர். இந்த சம்பவத்தால் 15.வேலம்பாளையம் பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

## முதல்வருக்கு நினைவு பரிசு




▶ திருப்பூர் பல்லடம் காரணம்பேட்டை பகுதியில் நடைபெற்ற மகளிர் மாநாட்டிற்கு வந்திருந்த தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினை, முன்னாள் காட்டன் மார்க்கெட் டைரக்டர் குட்வின் செல்வம் சந்தித்து நினைவுபரிசு வழங்கினார். அருகில் அவிநாசியப்பன் உள்ளிட்டோர் உள்ளனர்.

## தென்நாடு மக்கள் கட்சி சார்பில்

# கல்வி நலத்திட்ட உதவி வழங்கும் விழா



▶ தென்நாடு மக்கள் கட்சி சார்பில் வீரமங்கை வேலுநாச்சியாரின் 10-ம் ஆண்டு புகழ் வணக்க நாள் பொதுக் கூட்டம் மற்றும் கல்வி நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது.

**திருப்பூர், டிச. 31:** தென்நாடு மக்கள் கட்சியின் சார்பில் வீரமங்கை வேலுநாச்சியாரின் 10-ம் ஆண்டு புகழ் வணக்க நாள் பொதுக் கூட்டம் மற்றும் கல்வி நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா திருப்பூர் தாராபுரம் சாலை வெள்ளியங்காடு பகுதியில் நடைபெற்றது.

கட்சியின் மாநில பொதுச்செயலாளர் செந்தில் வாண்டையார் தலைமை தாங்கினார். நிறுவனத்தலைவர் கணேஷ் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றினார். தொடர்ந்து, கல்வியில் சிறந்து விளங்கும் 10 மாணவ- மாணவிகளுக்கு தலா 10 ஆயிரம் ரொக்கப்பணமும், ஏழை எளிய மக்களுக்கு சேலை மற்றும் 5 கிலோ அரிசியை 500 நபர்களுக்கு வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில், மாநில பொருளாளர் காளிமுத்து, மாநில தலைமை நிலைய செயலாளர் அன்பு, மாநில செயற்குழு உறுப்பினர் சுதாகர், முன்னாள் மேயர் விசாலாட்சி, மாநகராட்சி எதிர்க்கட்சித் தலைவர் அன்பகம் திருப்பதி, பல்வேறு அமைப்பின் தலைவர்கள் ஜோதி முத்துராமலிங்கம், சிற்றரசு, ஆறு சரவணன், சீனிவாசன், பாண்டியன், காளிமுத்து, எஸ்.பி.ராஜா, கே.டி.சுரேஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

## மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு சார்பில்

# மூன்றாம் பாலினத்தவர் உரிமைகள் விழிப்புணர்வு



▶ சட்டப்பணிகள் ஆணைக்குழு சார்பில் மூன்றாம் பாலினத்தவர் உரிமைகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நடந்தது.

**திருப்பூர், டிச. 31:** திருப்பூர் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு மற்றும் தன்னார்வ அமைப்பு இணைந்து திருப்பூர், வீரபாண்டி, வஞ்சிநகரில் மூன்றாம் பாலினத்தவர் உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வு முகாம் நேற்று முன்தினம் நடைபெற்றது. முகாமில் தன்னார்வ அமைப்பின் இயக்குநர் தங்கவேல், திட்ட மேலாளர் சந்திரா, சமூக செயற்பாட்டாளர் சிவகுமார், தன்னார்வ அமைப்பின் கள ஒருங்கிணைபாளர் சுதா, திருப்பூர் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு செயலாளர் மற்றும் சார்பு நீதிபதி சந்தோஷ் ஆகியோர் பங்கேற்று உரையாற்றினர்.

முகாமில் மூன்றாம் பாலினத்தவர்களின் உரிமைகளை அங்கீகரித்த தேசிய சட்டப்பணிகள் ஆணைக்குழு இந்திய அரசு வழக்கு தீர்ப்புரை குறித்தும், 2019-ஆம் ஆண்டின் மூன்றாம் பாலினத்தவர் உரிமைகள் பாதுகாப்பு சட்டம் குறித்தும் விளக்கப்பட்டது. இந்திய அரசியலமைப்பு உறுதிப்படுத்தியுள்ள சமத்துவ உரிமை, மத, இன, சாதி, பாலின மற்றும் பிறந்த இடம் ஆகியவற்றின் அடிப்படையிலான பாகுபாட்டிற்கு எதிரான தடை, பொது வேலைவாய்ப்பில் சமவாய்ப்பு, வாழ்க்கை மற்றும் தனி மனித சுதந்திர உரிமை (உறுப்புகள் 14, 15, 16 மற்றும் 21) ஆகியவை மூன்றாம் பாலினத்தவருக்கு உறுதிப்படுத்தப்பட்டு உள்ளது குறித்தும், இந்திய அரசியலமைப்பு உறுப்பு 51A (இ) வலியுறுத்தும் அடிப்படைக் கடமையான மனிதநேயம் மற்றும் சகோதரத்துவத்தை கடைபிடிக்க வேண்டியதன் அவசியம் குறித்தும், தேசிய, மாநில மற்றும் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக் குழுக்களின் செயல்பாடுகள் குறித்தும், வட்ட சட்டப்பணிகள் குழுக்களின் செயல்பாடுகள் குறித்தும், இலவச சட்ட உதவி எண் 15100 குறித்தும் விளக்கப்பட்டது. முகாமில் திருப்பூர் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக் குழுவின் முதுநிலை நிர்வாக உதவியாளர் சிராஜுதீன், சட்ட உதவி பாதுகாப்பு அலுவலர் கௌதம், திருச்சி தேசிய சட்டக் கல்லூரி உள்ளகப் பயிற்சி மாணவர்கள் யாழினி, சங்கமேஸ்வரன், வஞ்சிநகர் மக்கள் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# 500 போதை மாத்திரை பறிமுதல்

**திருப்பூர், டிச. 31:** திருப்பூர் பழவஞ்சிபாளையத்தில் சந்தேகப்படும்படி நின்ற வீரபாண்டியை சேர்ந்த கண்ணன் (29) என்பவரிடம் விசாரணை நடத்தியபோது அவர், 500 போதை மாத்திரைகளை விற்பனைக்கு வைத்திருந்தது தெரியவந்தது. இதனையடுத்து அவரை போலீசார் கைது செய்து, போதை மாத்திரைகளை பறிமுதல் செய்தனர்.

## திருப்பூர் தீரன் சின்னமலை மகளிர் கலை கல்லூரியில்

# கலைச்சிறகுகள்- 2025 கலை விழா



**திருப்பூர், டிச. 31:** திருப்பூர், வஞ்சிபாளையத்தில் உள்ள தீரன் சின்னமலை மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கலைசிறகுகள்- 2025 என்னும் கல்லூரி கலைத்திருவிழா கல்லூரி வளாகத்தில் நடந்தது. 30ம் தேதி நடந்த முதல்நாள் விழாவுக்கு கல்லூரி முதன்மை அதிகாரி ரேச்சல் நான்சி ஃபிலிப் தலைமை தாங்கினார். கல்லூரி முதல்வர் மோகன சவுந்தரி வரவேற்றார். விழாவில் மெஹந்தி, நைல் ஆர்ட், சாரி டிராப்பிங், ஹேர் டூ, சோலோ பாட்டு, குரூப் பாட்டு, ரேம்ப் வாக், ஃபேஸ் பெயிண்டிங், குப்பை பொருட்களில் அழகிய பொருட்கள் தயாரிப்பது மற்றும் அடுப்பில்லா சமையல் உள்பட பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டது.

போட்டிகளில் 300க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவிகள் உற்சாகத்துடன் கலந்து கொண்டனர். நடுவர்களாக சூர்யா தங்கராஜ், ஸ்வர்ணலதா, சித்ரா, ஹேஸ்லின் ஆகியோர் இருந்தனர். விழாவில் கல்லூரி பேராசிரியைகள் கணிப்பொறித்துறை தலைவர் சத்யா, ஆர்த்தி மற்றும் தீரன் சின்னமலை மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் பேராசிரியர்கள் ஒருங்கிணைப்பாளர்களாக செயல்பட்டனர்.

2ம் நாள் விழா இன்று (31ந் தேதி) காலை 10 மணி முதல் மதியம் 3 மணி வரை சோலோ நடனம், குரூப் நடனம், கருப்பு -வெள்ளை நடனம், மைமிங், அறிவுத்திறன் ஷோ, ரங்கோலி, போட்டோகிராபி ஆகிய போட்டிகள் நடக்கிறது. தொடர்ந்து பரிசளிப்பு விழா நடக்கிறது.

# அவிநாசி சாலையில் போக்குவரத்து சிக்னலை சரி செய்ய சிபிஎம் கோரிக்கை

**திருப்பூர், டிச. 31:** திருப்பூர் அவிநாசி சாலையில் அனுப்பர்பாளையம் புதூர்- வேலம்பாளையம் சாலையில் அமைக்கப்பட்டுள்ள சிக்னல் மக்களை குழப்பும் வகையில் இருப்பதாகவும். இதனால் ஏற்படும் நேர விரயம், விபத்து ஆகியவற்றை தடுக்க நடவடிக்கை எடுக்ககோரி மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி வேலம்பாளையம் நகரக்குழு சார்பில் கோரிக்கை மனு அளிக்கப்பட்டுள்ளது.

அந்த மனுவில், திருப்பூர் அவிநாசி சாலை- வேலம்பாளையம் சாலையில் உள்ள போக்குவரத்து சிக்னல், வாகனங்கள் கூடுதல் நேரம் நிற்பது, பேருந்துகள் திரும்புவதற்கு சிரமம். அருகருகே இரண்டு சிக்னல்கள் என மக்களைக் குழப்புவதாக உள்ளது. குறிப்பாக அவிநாசியில் இருந்து வரும் வாகனங்கள், கோவை டிபார்ட்மெண்ட் ஸ்டோர்ஸ் சிக்னலில் நிற்கும்போது, வேலம்பாளையம் செல்ல சிக்னல் திறக்கிறது. அப்போது அந்தவழியாகச் செல்லும் வாகனங்கள் செல்ல முடியாமல், இந்த சிக்னல் திறந்த பிறகு, சற்று தூரம் சென்று மீண்டும் சிக்னல் திறக்கும் வரை காத்திருக்க வேண்டி உள்ளது. பள்ளி மற்றும் அலுவலக வேலைக்குச் செல்லும் காலை மற்றும் மாலை நேரங்களில் இப்படி நேராகச் செல்ல வேண்டிய வாகனங்களும் பின்னால் தேங்கி நின்று, போக்குவரத்து நெருக்கடியை, நேர விரயத்தை, மன உளைச்சலைப் பொது மக்களுக்கு ஏற்படுத்துகிறது.

வேலம்பாளையத்தில் இருந்து வரும் வாகனங்கள் கோவை டிபார்ட்மெண்ட் ஸ்டோர்ஸ் அருகில் தேங்கி நின்று, சிக்னல் திறந்தவுடன் யு-டர்ன் போட்டுத் திரும்ப வேண்டும். அரசு மற்றும் பள்ளிப் பேருந்துகள், பெரிய லாரிகள் திரும்புவதற்கு மிகவும் சிரமத்தைச் சந்திக்கின்றன. எனவே, மேற்கண்ட குழப்பத்தை போக்க வேலம்பாளையத்திலிருந்து கோவை டிபார்ட்மெண்டல் ஸ்டோர்ஸ் அருகில் ப்ரீ லெப்ட் (அவிநாசி சாலை), நேராக திருப்பூர் சாலையில் இணைவது, இடதுபுறம் திரும்பி நேராக அங்கேரிபாளையம் சாலைக்குச் செல்வது என சிக்னல் அமைக்கவும். அங்கேரிபாளையத்தில் இருந்து கோவை டிபார்ட்மெண்டல் ஸ்டோர்ஸ் அருகில் ப்ரீ லெப்ட் (திருப்பூர் சாலை), இடதுபுறம் திரும்பி அவிநாசி சாலையில் இணைவது (யு டர்ன்), வேலம்பாளையம் சாலைக்குச் செல்வது என சுழற்சி முறை சிக்னல் அமைப்பை ஏற்படுத்துவது சரியாக இருக்கும் எனக் கருதுகிறோம்.

இப்பகுதியில் ரவுண்டானா அமைப்பதும் உதவிகரமாக அமையும் என வலியுறுத்தி சிபிஎம் நகரச் செயலாளர் நந்தகோபால் தலைமையில் கட்சியினர் கொங்குநகர் காவல் உதவி ஆணையரிடம் மனு அளித்தனர். மனுவைப் பெற்றுக்கொண்ட உதவி ஆணையர் இடத்தை நேரில் ஆய்வுசெய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தார்.

தமிழ்நாடு இந்து சமய அறநிலையத்துறை

**அருள்மிகு அமணலிங்கேஸ்வரர் திருக்கோயில்**
**திருமூர்த்திமலை, உடுமலைப்பேட்டை வட்டம், திருப்பூர் மாவட்டம்**

**மகா சிவராத்திரி திருவிழா வேலைகளுக்கான ஒப்பந்தப்புள்ளி திறப்பு அறிவிப்பு**

**பசலி-1435**

இத்திருக்கோயிலின் மகாசிவராத்திரி திருவிழா 15.02.2026ம் தேதி சிறப்பாக நடைபெற உள்ளது. அது சமயம் மேற்கொள்ளப்பட வேண்டிய கீழ்க்கண்ட விவரப்படியான வேலைகளுக்கு 19.01.2026 பிற்பகல் 1.30 மணி வரை மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் திருக்கோயில் செயல் அலுவலரால் வரவேற்கப்படுகிறது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் அன்றே பிற்பகல் 2.00 மணிக்கு திறக்கப்படும்.

| வ எண் | வேலையின் பெயர் | டேவணித் தொகை |
|---|---|---|
| 1. | ஒலி, ஒளி அமைத்தல் | 1,000.00 |
| 2. | பி.வி.சி. பந்தல் அமைப்பு, மேடை அமைப்பு, பச்சை அலங்காரம் (இனம் ஒன்றுக்கு) | 1,000.00 |
| 3. | வெள்ளை அடித்தல், வர்ணம் பூசுதல் | 1,000.00 |

டேவணித்தொகை "செயல் அலுவலர், அருள்மிகு அமணலிங்கேஸ்வரர் திருக்கோயில், திருமூர்த்திமலை" என்ற பெயரில் வங்கி வரைவோலையாக பெற்று வழங்கவேண்டும்.

இதர நிபந்தனைகளை திருக்கோயில் அலுவலகத்தில் கேட்டுத்தெரிந்து கொள்ளலாம்.

இங்ஙனம்

**நா.அமரநாதன்**
**செயல் அலுவலர்**
நாள் : 29.12.2025,
இடம் : திருமூர்த்திமலை

**ர.ரவி - அறங்காவலர் குழுத்தலைவர்,**
**Dr.க.ராஜபாலன் MBBS,DA.,**
**இல.இராதாகிருஷ்ணன்,**
**பு.பானுரேகா,**
**பொ.தேவராஜ்**
**அறங்காவலர்கள்**

வெ.ஆ.எண்: 391/2025. செ.ம.தொ.அ/2025/திருப்பூர் 30.12.2025

**"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம். சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"**

**திருப்பூர் மாநகராட்சி**

திருப்பூர் மாநகராட்சிக்கு சொந்தமான கீழ்காணும் ஆண்டு குத்தகை இனங்களை 2026 – 2029 வரையுள்ள மூன்றாண்டு காலத்திற்கு குத்தகைக்கு விட ONLINE MODE OF AUCTION வடிவில் ஏலம் கோர MSTC–யின் https://www.mstcecommerce.com/ இணையதள E-Auction Services மூலம் ஏலம் நடத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

1. பெருமாநல்லூர் சாலையில் அமைந்துள்ள புதிய பேருந்து நிலையம் ஸ்மார்ட் சிட்டி இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகங்கள் நிறுத்துமிடத்தில் வாகனங்கள் நிறுத்த கட்டணங்கள் வசூலிக்கும் குத்தகை உரிமம்.
2. பெருமாநல்லூர் சாலையில் அமைந்துள்ள புதிய பேருந்து நிலையத்தினுள் ஸ்மார்ட் மிஷன் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட, தரை தள கடைகள் மற்றும் உணவகம் குத்தகை உரிமம்.
3. ஈஸ்வரன் கோவில் வீதியில் ஸ்மார்ட் சிட்டி மிஷன் திட்டத்தில் கட்டப்பட்டுள்ள 87 தினசரி பூ மார்கெட் கடைகளில் கட்டணம் வசூலிக்கும் உரிமம், 50 இரண்டு மற்றும் 17 நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடத்திற்கான கட்டணம் வசூலிக்கும் உரிமம்.
4. காமராஜ் சாலை முத்தமிழ் அறிஞர் கலைஞர் மு.கருணாநிதி பேருந்து நிலையம் அருகில் தரை மற்றும் நான்கு தளங்களில் கட்டப்பட்டுள்ள பல அடுக்கு இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்.
5. கோவில்வழி பேருந்து நிலையம் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள்நிறுத்துமிடத்தில் வாகனங்கள் நிறுத்த கட்டணங்கள் வசூலிக்கும் குத்தகை உரிமம்.
6. 1. குமரன் சாலை மாநாட்டு மையம் அ) மாநாட்டு மையத்தின் முன்புறமுள்ள கட்டிடத்தின் தரை அடித்தளத்தின் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகன நிறுத்துமிடம்.
ஆ) மாநாட்டு மையத்தின் பின்புறம் தரை மற்றும் நான்கு தளங்களில் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகன நிறுத்துமிடம்.
2. மாநாட்டு மையத்தின் தரைதளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளம் ஹால்கள் ஃபுட் கோர்ட்.
7. மாநகராட்சி வெள்ளிவிழா பூங்கா நுழைவுக் கட்டணம் வசூலித்தல் மற்றும்
1) ரெஸ்டாரெண்ட் கட்டணம் வசூலித்தல்
2) ஐஸ்கீரீம் பார்லர் கட்டணம் வசூலித்தல்
3) இரு சக்கர வாகனம் நிறுத்தும் இடத்தில் கட்டணம் வசூலிக்கும் உரிமம்

அதன்படி, தற்போதுள்ள மாநகராட்சி வருவாய் இனங்களின் குத்தகைதாரர்களுக்கு மின்–ஏலம் குறித்து செயல்முறைகள் மற்றும் அதன் பதிவு நடைமுறைகள், ஏலதாரர் பங்கேற்பு. ஏல இறுதி செய்தல் ஏலத்திற்குப் பிந்தைய முறைகள் மற்றும் ஏலத்தில் பங்கேற்பது தொடர்பாக டிஜிட்டல் தள பரிவர்த்தனைகள் போன்றவற்றில் நேரடி செயல்முறை விளக்க கூட்டம் எதிர்வரும் 03.01.2026 ஆம் தேதி சனிக்கிழமை காலை 11.00 மணிக்கு குமரன் சாலை மாநாட்டு மையம் தரைதள கூட்டரங்கில் நடத்தப்படவுள்ளது. இம்மாநகராட்சி வருவாய் இனங்களின் அனைத்து ஒப்பந்தப்புள்ளி/ ஏலதாரர்கள் மற்றும் குத்தகைதாரர்கள் இது தொடர்பில், MSTC நிறுவன அலுவலர்கள் மூலம் நடத்தப்படும் நேரடி செயல்முறை விளக்க கூட்டத்தில் தவறாது கலந்துகொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ந.க.எண் : .5688/2025/மை.அ/அ1
நாள் : 29/12/2025

**ஆணையாளர்**
**திருப்பூர் மாநகராட்சி**

வெ.ஆ.எண்: 392/2025. செ.ம.தொ.அ/2025/திருப்பூர் 30.12.2025

**"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம். சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"**

விற்பனை மற்றும் புதிய சந்தா தொடர்பான விவரங்களுக்கு...
தினகரன்
8904156777
9.30 AM - 6.00 PM